# அண்டை மாநில நதி நீர்ப் பிரச்சினை; உச்ச நீதிமன்றம் மூலம் நமது உரிமையை நிலைநாட்டியுள்ளோம்!

## சட்டப்பேரவையில் நீர் வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

புல. எண். 455ல் முதலைமடை ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 15 கோடி மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், பள்ளப்பட்டி கிராமம், பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 7 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டிலும்,

இராணிப்பேட்டை மாவட்டம், கலவை வட்டம், தோனிமேடு கிராமம் அருகில் பென்னகர் மடுவின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி ரூபாய் 5 கோடியே 73 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் வட்டம், சாம்பாவர் வடகரை கிராமத்தில் சுந்தரபாண்டியபுரம் அணைகட்டிற்கு கீழ்புறம் ஹனுமாநதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே 55 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம் மாவடுகுறிச்சி கிராமத்தில் பூனைகுத்தியாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 9 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், கூளூர் மாவூர் கிராமங்களில் கொசஸ்தலையாற்றின் குறுக்கே மணற்போக்கியுடன் கூடிய தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 20 கோடி மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் வட்டம் மற்றும் மாவட்டம், பேரம்பாக்கம் கிராமத்தில் கூவம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 6 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், பெரியக்குமாரபாளையம் கிராமம் புல. எண். 422-ல் உப்பாறு ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும்பணி ரூபாய் 7 கோடியே 98 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு வட்டம், கோனையூர் கிராமம் அருகே செய்யாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 14 கோடி மதிப்பீட்டிலும்,

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், சங்கிலிக்குப்பம் மற்றும் பாப்பனப்பள்ளி கிராமங்களுக்கு இடையே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 29 கோடி மதிப்பீட்டிலும்,

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணச்சநல்லூர் வட்டம், கொணலை கிராமத்தில் சண்முகநதியாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 8 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி வட்டம் அக்கியம்பட்டி கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 9 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், வேப்பாலை கிராமம் அருகே பொன்னை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 24 கோடி மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், கிழச்சூர் கிராமத்தில் பாலாறு ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 48 கோடி மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், அம்முண்டி கிராமம் அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 48 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

**3. 8 மாவட்டங்களில், 9 இடங்களில் அணைக்கட்டுகள் அமைக்கும் பணி ரூபாய் 184 கோடியே 74 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்**

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு வட்டம், செட்டியப்பட்டி குக்கிராமம் அருகே கோடல்வாவி கிராமத்தில் கோபால சமுத்திரம் கண்மாயிற்கு நீர் வழங்கும் பொருட்டு

மாங்கரை ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும், கள்ளக்குறிச்சி மாவட்டம், வனப்புரம் வட்டம், மணலூர்பேட்டை கிராமத்தில் அதன் இருபுறமும் உள்ள 3 கண்மாய்களுக்கு ஏற்கனவே உள்ள கால்வாய்கள் மூலம் தண்ணீர் வழங்க தென்பெண்ணையாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 75 கோடி மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், தங்கலாச்சேரி பெரிய குளம் கண்மாய்க்கு நீர் வழங்க பூசலாபுரம் பூசலாபுரம் கிராமத்தில் கவுண்டா நதியின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டிலும்,

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், காட்டு எமனேஸ்வரம் கண்மாய்க்கு நீர் வழங்க வழிமறிச்சான் கிராமத்தில் பரளையாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே 18 இலட்சம் மதிப்பீட்டிலும்,

இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்கலம் வட்டம், ஓடைக்கரை கிராமத்தில், அயன்குடி கண்மாய் மற்றும் இதர கண்மாய்களுக்கு நீர் வழங்கும் பொருட்டு சருகனியாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 15 கோடி மதிப்பீட்டிலும்,

“காவிரி – குண்டாறு இணைப்புத் திட்டம்; முத்தமிழறிஞர் கலைஞரின் கனவுத் திட்டம்! கலைஞரின் கனவை – அவரது மகன் – தளபதி நிச்சயம் நிறைவேற்றுவார்!”

தென்காசி மாவட்டம், சிவகிரி வட்டம், கரிவலம் வந்தநல்லூர் கண்மாய்க்கு நீர் வழங்க தென்மலை கிராமத்தில், ஈச்சன் ஓடையின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 71 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், அம்பலூர் -இராமநாயக்கன் பேட்டை கிராமங்களுக்கு இடையே பாலாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 29 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி வட்டம், வக்கணாங் குண்டு கண்மாய்க்கு நீர் வழங்க பிசிந்தி கிராமத்தில் குண்டாறு ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 18 மதிப்பீட்டிலும்,

தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் வட்டம் நம்பிபுரம் கண்மாய்க்கு நீர் வழங்க முத்துலாபுரம் கிராமத்தில் வைப்பாறு ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 29 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

**4. 4 மாவட்டங்களில், 4 இடங்களில் ஆறுகளின் குறுக்கே புதிய நீரொழுங்கிகள் அமைக்கும் பணி ரூபாய் 6 கோடியே 4 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், முடிகரை கிராமத்தில், விளாங்காட்டூர் கண்மாய்க்கு நீர் வழங்கும் பொருட்டு நாட்டார்கால் ஆற்றின் குறுக்கே நீரொழுங்கி அமைக்கும் பணி ரூபாய் 37 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், கோட்டரப்பட்டி கிராமத்தில் சலிப்பேரி மற்றும் வேலமருதான் ஏரிகளுக்கு நீர் வழங்கும் பொருட்டு உய்யக்கொண்டான் 2வது நீட்டிப்பு வாய்க்காலின் குறுக்கே ஒரு நீரொழுங்கி அமைக்கும் பணி ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், மறவாபாளையம் கிராமத்தில் செல்லும் கீழ்பவானி திட்ட பிரதான கால்வாய் மைல் 95/200-ல் புதிய வெள்ளநீர் போக்கி அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 57 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், அதவத்தூர் கிராமத்தில் உய்யக்கொண்டான் வாய்காலில் உள்ள, உயர்மட்ட மதகுகளுக்கு நீர் வழங்கும் பொருட்டு உய்யக்கொண்டான் வாய்க்காலின் குறுக்கே நீரொழுங்கி அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

**5. மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒரு கடைமடை நீரொழுங்கி அமைக்கும் பணி ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், மருதம்பள்ளம் கிராமத்தில் சேவகனாறு வடிகாலின் குறுக்கே கடல்நீர் உட்புகுதலை தடுக்கும் பொருட்டு ஒரு கடைமடை நீரொழுங்கி அமைக்கும் பணி ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**6. மயிலாடுதுறை மற்றும் திருச்சி மாவட்டங்களில், 2 இடங்களில், படுகை அணை மற்றும் தள மட்டச் சுவர் அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 57 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் வட்டம், பெருமாள்கோவில் கிராமத்தில், பீங்கான் வாய்க்கால், பெரட்டகுடி வாய்க்கால் மற்றும் அய்யம்பள்ளம் வாய்க்கால்களுக்கு நீர் வழங்கும் பொருட்டு மகிமலையாற்றின் குறுக்கே நெடுகை 117.540கி.மீல் தளமட்டச்சுவர் அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 5 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், மாங்குடி கிராமத்தில், வெட்டுவாரி வடிகாலின் குறுக்கே நெடுகை 200 மீட்டரில் படுகை அணை அமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 52 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

**7. மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒரு கீழ்க்குமிழி ரூபாய் அமைக்கும் பணி 4 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், வெள்ளப்பள்ளம் கிராமத்தில், வெள்ளப்பள்ளம் உப்பனாறு வடிகாலின் குறுக்கே நெடுகை 13.850 கி.மீல் கீழ்குமிழி அமைக்கும் பணி ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**8. பாசன நிலங்களை எளிதில் சென்றடைய ஆறுகளின் குறுக்கே 8 மாவட்டங்களில், 17 இடங்களில், பாலங்கள் மற்றும் தரை பாலங்கள் அமைக்கும் பணி ரூபாய் 130 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆழியார் ஊட்டுக்கால்வாயில் சரகம் 6/690கி.மீ மற்றும் சரகம் 6/850கி.மீ-ல் உப்பாறு இடது மற்றும் வலது ஓடையில் பாலம் அமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 97 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஆண்டிப்பட்டி கிராமத்தில், குதிரையாறு அணைக்கு அருகில் குதிரையாற்றின் குறுக்கே புதிதாக தரைமட்ட பாலம் அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், அ.கலையம்புத்தூர் கிராமத்தில், பொருந்தலாறு ஆற்றின் குறுக்கே புதிதாக தரைமட்ட பாலம் அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 31 இலட்சம் மதிப்பீட்டிலும்,

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், கீழ் பவானி திட்டக்கால்வாயின் ஊஞ்சலூர் பகிர்மான கால்வாய் குறுக்கே மைல் 5-0-30ல் புதிய பாலம் கட்டும் பணி ரூபாய் 1 கோடியே 6 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், அவலப்பள்ளி மற்றும் தட்டிகானப்பள்ளி கிராமங்களை இணைக்கும் வகையில், பெண்ணையாற்றின் குறுக்கே கெலவரப்பள்ளி அணையின் கீழ்புறத்தில் உயர்மட்ட பாலம் அமைக்கும் பணி ரூபாய் 9 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், ஆண்டாபுரம் கிராமத்தில் கரைபொட்டனாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் பணி 3 கோடியே 68 இலட்சம் மதிப்பீட்டிலும்,

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், குப்புச்சிபாளையம் கிராமத்தில் பொய்யேரி வாய்காலின் குறுக்கே சிறு பாலம் அமைக்கும் பணி ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், பாத்தை கிராமத்தில் பச்சையாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்கும் பணி மற்றும் வடக்கு பச்சையாறு அணையின் ஆய்வு சாலை சீரமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 15 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், மேட்டுப்பாளையம் கிராமத்தில், கீழ்பவானி திட்ட பிரதான கால்வாயின் குறுக்கே மைல் 120-4-635ல் புதிய பாலம் அமைக்கும் பணி ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், வள்ளியரச்சல் கிராமத்தில் கீழ்பவானி திட்ட பிரதான கால்வாயின் குறுக்கே மைல் 117/3ல் பாலம் அமைக்கும் பணி ரூபாய் 33 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், கொல்லமங்கலம் கிராமம், அய்யா கவுண்டன்பட்டி மற்றும் தட்டாங்குட்டை இடையே அகரம் ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் பணி ரூபாய் 6 கோடி மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பள்ளிக்குப்பம் மற்றும் செல்லக்குட்டப்பட்டி கிராமங்களுக்கு இடையே அகரம் ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் பணி ரூபாய் 6 கோடி மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், கூட நகரம் மற்றும் அகரம்சேரி கிராமங்களுக்கு இடையே பாலாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் பணி ரூபாய் 37 கோடி மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு வட்டம், பாலூர் கிராமம் அருகே மலட்டாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்கும் பணி ரூபாய் 9 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு நகரம் ஆயக்கர் தெருவின் அருகே பேர்ணாம்பட்டு காட்டாற்றின் குறுக்கே கண்களுடன் கூடிய தரைப்பாலம் அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு வட்டம்,சாத்கர் கிராமம் அருகே பேர்ணாம்பட்டு காட்டாற்றின் குறுக்கே கண்களுடன் கூடிய தரைப்பாலம்அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், தழையாத்தம் முதல் பெரும்பாடி வரை சாலை நீட்டிப்பு செய்தல் மற்றும் கௌண்டன்யா ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் பணி ரூபாய் 39 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

**9. இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில், முன்னாள் ஜமீன் கண்மாய்களான 14 குறு பாசன கண்மாய்களைப் தரப்படுத்தும் பணி ரூபாய். 9 கோடியே 34 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், முதுகுளத்தூர் ஒன்றியம், இளங்காக்கூர் கிராமத்தில், இளங்காக்கூர் முன்னாள் ஜமீன் கண்மாயினைத் தரப்படுத்தும் பணி ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டிலும்,

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், திருவாடானை ஒன்றியம், நெய்வயல் கிராமத்தில், சீர்தாங்கி முன்னாள் ஜமீன் கண்மாயினைத் தரப்படுத்தும் பணி ரூபாய் 53 இலட்சம் மதிப்பீட்டிலும்,

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், முதுகுளத்தூர் ஒன்றியம் தாழிய ரேந்தல் கிராமத்தில், தாழிய ரேந்தல் முன்னாள் ஜமீன் கண்மாயினைத் தரப்படுத்தும் பணி ரூபாய் 65 இலட்சம் மதிப்பீட்டிலும்,

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், திருவாடானை ஒன்றியம் நெய்வயல் கிராமத்தில், நெய்வயல் வடக்கு முன்னாள் ஜமீன் கண்மாயினைத் தரப்படுத்தும் பணி ரூபாய் 60இலட்சம் மதிப்பீட்டிலும்,

இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்கலம் வட்டம், ஆர்.எஸ்.மங்கலம் ஒன்றியம் கவ்வூர் கிராமத்தில், பூவானி முன்னாள் ஜமீன் கண்மாயினைத் தரப்படுத்தும் பணி ரூபாய் 63 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், சாக்கோட்டை ஒன்றியம், கொத்தரி கிராமத்தில், கொத்தரி முன்னாள் ஜமீன் கண்மாயினைத் தரப்படுத்தும் பணி ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், மானாமதுரை ஒன்றியம், அன்னவாசல் கிராமத்தில், பூவரசன்கோட்டம் என்கிற தாவரசன்கோட்டை முன்னாள் ஜமீன் கண்மாயினைத் தரப்படுத்தும் பணி ரூபாய் 61 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், கண்ணங்குடி ஒன்றியம், கிளாமலை கிராமத்தில், தேர்போகி முன்னாள் ஜமீன் கண்மாயினைத் தரப்படுத்தும் பணி ரூபாய் 80 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ். புதூர் ஒன்றியம், நெடுவயல் கிராமத்தில், பட்டு முன்னாள் ஜமீன் கண்மாயினைத் தரப்படுத்தும் பணி ரூபாய் 49 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், மானாமதுரை ஒன்றியம், மிளகனூர் கிராமத்தில், காஞ்சிமடை முன்னாள் ஜமீன் கண்மாயினைத் தரப்படுத்தும் பணி ரூபாய் 72 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், சாக்கோட்டை ஒன்றியம், நாட்டுச்சேரி கிராமத்தில், நாட்டுச்சேரி சின்ன முன்னாள் ஜமீன் கண்மாயினைத் தரப்படுத்தும் பணி ரூபாய் 53 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், எஸ்.புதூர் ஒன்றியம் மின்னாமலைப்பட்டி கிராமத்தில், புதுக்குளம் முன்னாள் ஜமீன் கண்மாயினைத் தரப்படுத்தும் பணி ரூபாய் 63 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், மானாமதுரை ஒன்றியம் அன்னவாசல் கிராமத்தில், எஸ். கரிசல்குளம் முன்னாள் ஜமீன் கண்மாயினைத் தரப்படுத்தும் பணி ரூபாய் 71 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், தேவகோட்டை ஒன்றியம், நெடுங்குளம் கிராமத்தில், கைக்குடி முன்னாள் ஜமீன் கண்மாயினைத் தரப்படுத்தும் பணி ரூபாய் 84 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

**10. கன்னியாகுமரி மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் 5 இடங்களில் கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைக்கும் பணி மற்றும் கடற்கரை பாதுகாப்புப் பணிகளுக்கான “கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி” பெறுவதற்கான முதற்கட்ட பணிகள் ரூபாய் 1 கோடியே 34 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

கன்னியாகுமரி மாவட்டம்,அகஸ்தீஸ்வரம் வட்டம், அழிக்கால் கிராமத்தில், கடலரிப்பு தடுப்புச்சுவர் மறுகட்டுமானப் பணிக்குகடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி பெறுவதற்கான முதற்கட்ட பணி ரூபாய் 21 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டம், இரவிபுத்தன்துறை கிராமத்தின் மேற்கு பக்கத்தில் (எடப்பாடு தியான நிலையத்தின் கிழக்கு பகுதி) கடலரிப்பு தடுப்புச்சுவர் அமைக்கும் பணிக்கு கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி பெறுவதற்கான முதற்கட்ட பணி ரூபாய் 21 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கன்னியாகுமரி கடலரிப்பு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், மணக்குடி கிராமத்தில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணிக்கு கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி பெறுவதற்கான முதற்கட்ட பணி ரூபாய் 21 இலட்சம் மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், கோவளம் கிராமத்தில் கடலரிப்பு தடுப்புச்சுவர் மறுகட்டுமான பணிக்கு கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி பெறுவதற்கான முதற்கட்ட பணி ரூபாய் 21 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி மற்றும் தரங்கம்பாடி வட்டங்களில், 12 கடற்கரைப் பாதுகாப்புப் பணிகளுக்கு கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி பெறுவதற்கான முதற்கட்ட பணிகள் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும் என்பன உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வெளியிட்டார்.